JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

CC.No. 105/2021 Date:16.09.2025 P.W. 4 / LW 5

| | |
|---|---|
| பெயர் | திரு. S. சுரேஷ்குமார் |
| தந்தை பெயர், க/பெ | திரு. செல்வராஜ் |
| முகவரி | நெ. 17/8 முதல் தெரு, வாசுதேவர் தோட்டம், சென்னை 110 |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of September 2025.

எதிரி ஆஜாில் உள்ளார்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 மெர்லின் என்பவரை தெரியும். அவரது தந்தை பூமணி என்பவரை தெரியும். பாடியில் உள்ள பூமணி அவர்களின் வீட்டின் மாடியில் எளிய முறையில் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. நிச்சயதார்த்தம் நடைபெற்ற அன்று பூமணி வீட்டின் ஹாலில் பூமணி சார் விஜியிடம் வரதட்சனை பணம் ரூ.6 லட்சம் பணம் கொடுத்ததை நான் அருகில் நின்று பார்த்தேன். நிச்சயதார்த்தம் நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கன்னியாகுமரியில் உள்ள வீட்டிற்கு பூச்சு வேலை நடைபெறுவதாக கூறி ரூ. 2 லட்சம் பூமணி விஜியிடம் பணம் கொடுத்ததை வந்தவர்களிடம் சொன்னதை கேட்டேன். திருமணம் அம்பத்தூர் நகரில் உள்ள ஷாம் மஹாலில் மெர்லின்க்கும் பெஞ்சமின் என்பவருக்கும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. திருமண செலவு ரூ. 10,28,000/- ஆனது அதில் பாதி பணம் மாப்பிளை வீட்டார் தருவதாக கூறினார்கள். ஆனால் பணம் தரவில்லை. அதன் பின்பு கொடுங்கையூரில் உள்ள ஓசோன் சர்ச் அருகில் உள்ள வீட்டில் மெர்லின், பெஞ்சமின், விஜி, பிரேம், சேகர் ஆகியோர் அனைவரும் ஒன்றாக வசித்து வந்தார்கள். இதற்கு பிறகு பூமணி சாருடன் 2 முறை நான் அந்த வீட்டிற்கு சென்று வந்தேன். 2 முறையும் மெர்லின் முகம் துக்கமாகவே இருந்தது. என்னவென்று கேட்ட போது அவர் எதுவும் கூறவில்லை.அதன் பிறகு மெர்லின்க்கு குழந்தை 2 மாதத்தில் நின்ற பிறகு பூமணி சார் வீட்டிற்கு வந்து திரும்பவும் சென்றுவிட்டார். சென்ற பின்பு எனது 100 சவரன் நகைகளிலிருந்து 40 சவரன் நகை காணவில்லை என்று விஜி என்பவரிடம் கேட்டபோது கோடப்பாக்கம் வங்கியில் 40 சவரன் நகையை அடகு வைத்து கன்னியாகுமரியில் உள்ள வீட்டிற்கு 25 லட்சம் வங்கியில் வாங்கிய லோனை அடைப்பதற்காக மேற்படி அடகு வைத்த நகையின் பணத்தை ரூ. 5,70,000/- ஐ

அடமானம் வைத்து அந்த வங்கியில் செலுத்திவிட்டதாக கூறினார்கள். ரூ.25 லட்சம் கடன் வாங்கயதை திருமணத்திற்கு முன்பு மறைத்துவிட்டுதான் திருமணம் செய்தார். இதில் 40 சவரன் நகைகளில் இருந்து 24 சவரன் நகையை மீட்டுகொடுத்துவிட்டார்கள். மீதி 16 சவரன் நகையை இன்று வரை திருப்பி கொடுக்கவில்லை. இதன் பின்பு மெர்லின் 7 மாத சீமந்தம் செய்து பூமணி வீட்டிற்கு அழைத்து வந்தார்கள். அப்போது பெஞ்சமின் வீட்டிற்கு வந்தார். பாடியில் இருந்து பெருக்குடிக்கு இருசக்கர வாகனத்தில் செல்வதால் எனக்கு பேக் பெயின் வருவதாகவும் கூறி தனக்கு கார் வாங்கி கொடுத்தால் தான் இல்லை என்றால் வேலைக்கு செல்லமாட்டேன் என்று பெஞ்சமின் சொன்னதாக பூமணி என்னிடம் கூறினார். அதன் பிறகு பூமணி ரூ.2,20,000/- நகையை அடமானம் வைத்து பெஞ்சமின் பெயரில் காரை வாங்கி கொடுத்தார். அதன் பின்பு குழந்தை பிறந்த பிறகு 3 மாதம் கழித்து பெஞ்சமின் மெர்லினையும் பெஞ்சமின் வீட்டில் விட்டார். ஆனால் அநத் வீட்டில் இருந்த விஜி பிரேம் சேகர் 3 பேரும் சேர்ந்து இரண்டு பேரையும் சேர்க்கமாட்டேன் என்று கூறி வெளியேற்றி விட்டார். அதன் பின்பு பெஞ்சமின் வேலை பார்க்கும் பெருங்குடி பகுதியில் ஒரு வீட்டிற்கு ரு.80,000 அட்வான்ஸ் கொடுத்து குடி வைத்தார். அதன் பின்பு பெஞ்சமின் வேலை பார்க்கும் அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண்ணுக்கும் பெஞ்சமின்க்கும் தொடர்பு -ஏற்பட்டதை அறிந்த முதலாளி இருவரையும் வேலையை விட்டு நீக்கிவிட்டார். இதனால் பெஞ்சமின்க்கு கடன்பிரச்சனையும், பணப்பிரச்சனையும் ஏற்பட்டதால் தினமும் குடித்து வந்து மெர்லினை அடித்து துன்புறுத்தி காயப்படுத்தி கொலை முயற்சி செய்தும் மீண்டும் உனது அப்பாவிடம் ரூ.5 லட்சம் பணம் வாங்கி வந்தால் தான் இந்த வீட்டில் குடி இருக்கமுடியும் என்று கூறியதால் மெர்லின் வழி தாங்க முடியாமல் தனது தந்தை வீட்டிற்கு வந்துவிட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக பெஞ்சமின், விஜி, பிரேம், சேகர் ஆகியோர் பேசிய ஆடியோவை பென் டிரைவ் மூலம் பூமணி அவர்கள் சமர்ப்பித்துள்ளார். இநத் பென் டிரைவ் உள்ள ஆடியோவில் ரூ.8 லட்சம் பணம் வாங்கியது ஒப்புக்கொண்டும், கார் 2,20,000/- வாங்கியதை ஒப்புக்கொண்டும் மற்றும் ரூ.80,000/- வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்ததை ஒப்புக்கொண்டும் மற்றும் மேலும் ரூ. 5 லட்சத்தை வாங்கி வந்தால் தான் வாழ முடியும் என்பதை அவர்களை கூறியதை அ வர்கள் ஆடியோவில் கூறியுள்ளார்கள். மேலும் கொடுங்கையூரில் உள்ள வீடு பெஞ்சமின்க்கு என்று சொல்லி கன்னியாகுமரியில் உள்ள வீடு பிரேம்க்கு என்று சொல்லி திருமணம் செய்தார்கள். பிறகு கொடுங்கையூரில் உள்ள வீட்டை ரூ. 1 கோடி ரூபாய்க்கு விற்று விட்டு கன்னியாகுமரிக்கு சென்று விட்டார், மற்றும் விஜி என்பவர் சினிமா துறையில் இருந்தபோது சோசியல் மீடியாவில் டிக்டாக் செய்து கொண்டிருப்பார். இந்த விஷயத்தை பூமணி வீட்டிற்கு தெரியாமல் மறைந்துவிட்டார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**மறு விசாரணை - இல்லை**

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur